1975 அக்டோபர் 24]

தச்சம்பட்டு கிராமத்தில் உப-மின் நிலையம்

*** 37 வினா—திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : மாண்புமிகு** தொழில்-மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து **கீழ்க்கண்ட** வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை வட்டம், **தச்சம்பட்டு கிராமத்தில்** மின்சார சப்-ஸ்டேஷன் (உப மின் நிலையம்) **அமைக்கும் திட்டம் உள்ளதா ?**

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது முதல் **செயல்பட உள்ளது .**

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) **ஆம்.**

(இ) ஆய்வில் உள்ளது.

திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : தலைவரவர்களே, **என்னுடைய** பகுதியில் திருவண்ணாமலையிலிருந்து 20 மைலுக்கு மேலாக உள்ள கிராமங்களில் மின்சாரம் சப்ளை **செய்து** கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் அங்கே ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு விவசாயியும் இரண்டு முறை, மூன்று முறை மோட்டார்காயில் தீய்ந்து விடுவதால் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே சீக்கிரமாக இதை முடிப்பதற்கு ஆவன செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. **எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, தேவைப்படும் ஆக்க சக்தியை ஆக்கப் பூர்வமாக மதிப்பிட்டு, **துணை** மின்நிலையம் ஏற்படுத்த அவசியம் **உள்ளதா என்பதை** போதிய காரணங்களுடன் விளக்கும்படி மின்வாரிய மேற்பார்வையாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அவருடைய அறிக்கை வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

இறைவைக் கிணறுகளுக்கு மின் இணைப்பு

*** 38 வினா—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்தில், **வறட்சி நிவாரணத்** திட்டத்தின்கீழ் புதியதாக எத்தனை இறைவை கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க உத்தேசிக்கப்பட்டு உள்ளது ?